உ

கடவுள் துணை.

வித்தியாபாநு.

மதுரையில் பிரசுரமாகும்

ஒரு மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

தொகுதி ௩. } விரோதிகிருது௵ ஆனி௴ { பகுதி ௩.

முடிசூட்டுக் கொண்டாட்டம்.

1911௵ ஜூன்௴ 22௳ குருவாரம் தசமிதிதி அசுவதி நக்ஷத்திரம், அமிர்த யோகம் கூடிய சுபதினத்தில் பூவுலகத்தில் புகழ் மிகப்பெற்ற லண்டன்மாநகரத்தில் வெஸ்ட் மினிஸ்டர் ஆபி என்ற பிராசீன ஆலயத்தின்கண் குருக்கள்மாரும், முடியுடைவேந்தர்களும், பிரஜைகளும், பற்பல பாஷா விற்பன்ன பண்டிதமணிகளும் சுற்றத்தாரும் சுற்றியிருந்து ஜயஜயவென்று வாழ்த்தெடுக்கச் சகல வைபவங்களுடன் வெகு விமரிசையாக நமது அரசர் பெருமானாகிய ஐந்தாம் ஜார்ஜ் மஹாராஜா அவர்களும், மகாராணி மேரி அம்மையாரவர்களும் மகுடாபிஷேகஞ் செய்யப்பெற்றார்கள்.

மிகவும் சந்தோஷகரமாக முடிசூட்டுக் கொண்டாட்டம் இனிது நிறைவேறியது. அந்த நற்றினத்தில் கருணை மிக்க பிரிட்டிஷ் அரசாட்சிக்குட்பட்ட நாடுகளிலெல்லாம் தலைமை நகரங்கள் தோறும் ஜனங்கள் தங்கள் சந்தோஷத்தைக் காட்டிப் பலவகை விமரிசைகளுடன் கொண்டாடினார்கள்.

மதுரைமா நகரத்தில் அன்று தினம் காலை 9-மணிக்கு திருமலை நாயக்கர் மாலில் உத்தியோகஸ்தர்களும் வக்கீல்களும் பிரபுக்களும் ஆகிய தக்க கனவான்கள் பலரும் வந்து கூடினார்கள். செங்கோல் வேந்தர் பிரதிநிதியாகி கருணையும் நீதியும் கலந்து மதுரை ஜில்லாவைப் பரிபாலிக்கும் கனம் பொருந்திய டிஸ்திரிக்டு கலெக்டர் துரையவர்கள் வந்தவர்களை யெல்லாம் முகமலர்ச்சியுடன் வரவேற்றார்கள். எல்லாருக்கும் புஷ்பச் செண்டு கொடுக்கப்பட்டது. வாத்தியங்கள் முழங்க மஹாராஜா அவர்கள் மகாராணியவர்கள் திருவுருவப் படங்களை யானைமேல் வைத்து அலங்கரித்து கனம் கலெக்டர் துரையவர்களும் ஆனைமேல் ஆரோகணிக்கச் சகல ஜனங்களும் சூழ்ந்துவர வெகு கோலாகலத்துடன் நகர்வலம் வந்த காட்சி அழகாயிருந்தது. மாலை 3-மணிக்கு மேல் பசுமலையில் பலவித வேடிக்கைகள் நடந்தன. எல்லாம் நமது மஹாராஜா அவர்களும் மஹாராணி அவர்களும் அரோகதிடகாத்திரராய்ச் செங்கோல் செலுத்திப் பல்லாண்டு வாழ வேண்டுமென்ற ஜன சமூக அபேக்ஷையைக் காட்டும் பொருட்டே இந்தவிதம் மங்களமாக நிறைவேறின. எல்லாம் வல்ல இறைவனருளால் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் பல்லூழி வாழ்க.

சுபம். சுபம்.

பத்திராதிபர்.

சிவமயம்

* வாகீசப்பிரபாவம்.

வாகீசப்பிரபாவமானது அளவுபடுத்திக்கூறும் தகைமைத்தன்று. எமை முழுமுதற்கடவுளான பரசிவனால் அடியெடுத்துக்கொடுத்தருளப்பெற்ற அருண்மொழித்தேவராகிய சேக்கிழார் பெருந்தகையே

“திருநாவுக் கரசுவளர் திருத்தொண்டி னெறிவாழ
வருஞான தவமுனிவர் வாகீசர் வாய்மைதிகழ்
பெருநாமச் சீர்பரவ லுறுகின்றே னெனப்பெருகில்
ஒருநாவுக் குரைசெய்ய வொண்ணுமோ வுணராதேன்”

என்று அருளிச்செய்வரேல் அதனை ஒருவகைச்செயலுமில்லாத புழுத்தநாயினுங்கடையனாகிய யான் உரைத்தல் செல்லாதென்பது துணிபேயாயினும் இந்நாள்.

“மண்முதலா முலகேத்த மன்னுதிருத் தாண்டகத்தைப்
புண்ணியா வுன்னடிக்கே போதுகின்றே னெனப்புகன்று
நண்ணரிய சிவானந்த ஞானவடி வேயாகி
அண்ணலார் சேவடிக்கீழ் ஆண்டவர செய்திய”

நன்னாளாகலின் அவர் நாமசிந்தனை செய்த லொன்றுமே மிக்க பய னுடைத்தென்பது கருதியும்

“செப்ப லுற்ற பொருளின் சிறப்பினால்
அப்பொ ருட்குரை யாவருங் கொள்வரால்
இப்பொ ருட்கென் னுரைசிறி தாயினும்
மெய்ப்பொ ருட்குரி யார்கொள்வர் மேன்மையால்”

என்பது கருதியும், ஞானவாக்குவிகளாயுள்ள பெரியார் சோதாட்டொழிந்து குணங்கொண்டு குறையகற்றுவார்களாமாதல் கருதியும் இச்சபையார் சன்மார்க்க சபையாராய் யாவரையும் நன்னெறிப்

---

* இது மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையில் வாசிக்கப்பெற்றது.

படுத்துவோராதலின் எமையேனையும் நன்னெறிப்படுத்தி யருள்வரென்பது சிந்தித்தும் ஒருசிறிதும் பயமின்றி வாகீசப்பிரபாவங்கூறுமா தொடங்கினேன்.

வாகீசர், வாக், ஈசர், சொல்லின்மன்னர், சொல்வேந்தர், நாவுக்கரசர் என்பன ஒரு பொருட்சொற்கள். வாக்கு—ஞான வாக்கு. பூதாகாசமாகிய மாயாகாசத்தினின்றெழும் மாயாகாரிய வொலியாகிய மருள்வாக்கன்றி ஞானாகாசம் அல்லது சிதாகாசமாகிய திருச்சிற்றம்பலத்தினின்றும் எழும் அருணாதவொலியாகிய அருள்வாக்காமென்க. இதனாலேயே இவனார் வாக்குகள் அருட்பாக்களாமாறு உணரப்பெறும்.

பிரபாவம், பெருமை, கீர்த்தி, மான்மியம், மகிமை என்பன வொரு பொருளன.

எனவே வாகீசபபிரபாவமானது திருநாவுக்கரசரது மகிமை கூறல் எனப் பொருள்பெறும். இச்சொற்றொடர் மூச்சொற்களான இருசந்தியையுடைய ஒருதொடர்மொழி. சந்திகள் வடமொழிச்சந்தி.

திருநாவுக்கரசுநாயனார் ஆன்மவருக்கத்து மனித்கோடிகளுள் வினைப்போகந்துய்ப்பான் சரீரமெடுத்துழலும் நம்மனோரைப்போலன்றி சிவாக்ஞையால் உலகோபகாரமாகத் திருவவதாரஞ் செய்தருளிய கருணாமூர்த்தி என்பதை

“அலகில்கலைத் துறைதழைப்ப வருந்தவத்தோர் நெறிவாழ
உலகில்வரு மிருணீக்கி யொளிவிளங்குகதிர்போற்பின்
மலருமருணீக்கியார் வந்தவதாரஞ் செய்தார்.” என்றரு-

ளிய திருவாக்கானறிக. இவரது தேவாரங்கள் தமிழ்ப் பாஷைக்குரிய முக்கிய இலக்கியங்களுள் முதன்மை பெற்றனவாயும் கேட்போர் முருட்டுமனத்தையும் உருக்கும் இனிமை யுடையனவாயும் சகல சாத்திரார்த்தங்களையும் தம்மகத்தடக்கியவையாயும் சமண் பௌத்தம் முதலிய சமயவுண்மைகளைப் பூர்வபக்ஷப்படுத்தி சைவ சமய மேன்மையை விளக்குவனவாயுமுள்ளனவாதலாலும், நாயனார் அத்தகைய தேவாரங்களைப்பாடுதலொன்றன்றித் தமது செய

லாலும் சிறக்க விளக்கினாராதலாலும் இவரது திருவவதாரம் உலோ கோபகாரமாயினமை காணப்பெறும்.

இனி இந்நாயனார் முற்பிறப்பிலும் சிறந்து விளங்கினமை இவரது பூர்வசரித்திரங்களால் நன்கறியப்பெறும்.

திக்குவிஜயஞ்செய்து போதரும் இராவணன் இறைவனெழுந் தருளியிருக்கும் திருக்கயிலை யெனச்சிறிது மெண்ணாது ஆகாயமார்க் கமாப்புட்பகமூர்ந்து செல்பவன் நந்தியெம்பெருமானரால்கீழ்வீழ்த் தப்பெற்று சினமீதூர்ந்து திருமலையைப் பெயர்க்குமாறு தொடங்கலும் இறைவன் தமது காற்பெருவிரலைச்சிறிதே யூன்றியருளப் பன்னெடுங் காலம் நசுக்கிப்போகக்கிடந்தனனாக-திருமலையைவலம்வரும்வாகீசப் பெருமான் இரங்கி "சங்கரன் சாமகானப்பிரியன்" என்று குறிப் பாலுணர்த்திப்போதலும் அவன் சாமகானம் செய்து இன்னருள் பெற்றான். சிவாபராதஞ் செய்து தண்டிக்கப் பெறுமவதியில் தப்பு வித்த குற்றம்பற்றி வாகீசர் இறைவனால் உலகத்துதிக்குமாறு அனு க்ஞை செய்யப் பெற்றனர் அவரே நமது திருநாவுக்கரசர்-இஃ தோர் சரித்திரம். மற்றொன்று இவர் முனிவர் பெருமானாகிக் கோ தாவரி தீரத்தில் பலமுனிவர்களால் சூழப்பெற்றிருந்த சமயமொன் றில் அம்முனிவர்களால் "உண்மைச்சமயம் யாது" என வினவப் பெற்றபோது இவர், தமது வித்தியாசாமர்த்தியத்தினன். அவர் களை மருட்டும் வகையான் சமண் சமயமே சற்சமைய மெனச் சித் தாந்தம்செய்தமையால் அம்முனிவருள் ஒருவர் இவரைச் சமணரா மாறு சபித்தமைப்பற்றி இவர் தோன்றிச் சமண் சமயப் பிரவேசம் செய்து பிறகு சைவசமய மடைந்தனர் என்பதே.

இவ்விரு சரித்திரங்களாலும் இந்நாயனார் பூர்வஜன்மத்தில் உத்தமோத்தம பரிபாகமுற்றவரென்றும் சிறிது வழுவலினாலே சிவாக்ஞைப்படி திருவவதாரஞ் செய்தவராமென்றும் அறியப்பெ றும்.

இவர் தமக்குற்ற சூலைநோய் தீரும்படி அருளிச்செய்த திரு ப்பதிகத்தில் "கூற்றாயினவாறு" என்றோதியருளியது. கூற்றுப்

போன்று தம்மை வருத்தும் சூலையென உதிக்கும் சாமானியப் பொருள் ஒன்றன்றி, இராவணனுக்குக் கூறிய உபாயமாகிய ஓர் கூற்றே தமக்குக கூற்றாயினவாறும், முனிவர்களுக்குப் பொய்யை மெய்யாகக் கூறிய கூற்றே தமக்குக் கூற்றாயினவாறும், தோன்ற அருளிச்செய்தமையால் விசேட தொனியர்த்தங்கள் அல்லது அந்த ர்ார்த்தங்கள் அதனுட் டோன்றுமாற்றானும் இவரது முற்பிறப்பி னுண்மைகளை உற்றறிக. இதுவன்றி; பெரியபுராணத்திலும் திலக வதியார் சிவபெருமானை நோக்கித் தமது தம்பியாராகிய இவர்க்கு அருளும்படி வேண்டியபோது அவர் கனவின்கண் சிவபெருமான் தோன்றி "......... உன்னுடன்பிறந்தான், முன்னமே, முனியாகி, யெனையடையத் தவமுயன்றான்" என்றருளிய திருவாக்கானும் இவ ரது முற்பிறப்பின் குறிப்பும, "பண்டுபுரி நற்றவத்துப் பழுதினள விறைவழுவுந் தொண்டரை" என்றதான இவர் தவவழுவினுன் மா த்திரம் திருவவதாரம் செய்யப்பெற்றனர் என்னுங் குறிப்பும் அறி யுமாறு கிடத்தல் காண்க.

இவர் திருவவதாரம் செய்தஞான்றே இவர்திருமேனிப் பொ லிவு முதலியனவும் காணப்பெற்ற நன்னிமித்தங்களும, இவர் உலகு ய்யுமாறு எழுந்தருளி ஆன்மமயக்கம் நீக்குமாறு வீற்றிருப்பர் என் னும் குறிபபுகள் தோனறுமே. இவர்க்கு மருணீக்கியார் எனத் திரு நாமம் சூட்டப்பெற்றதுபோலும். சமணரை யடைநது பொய் யை மெய்யாகப் போதித்திருந்தபோதும் அன்னாரது மருணீக்கினை ராகவின் ஆண்டு மது பொருநதுவது காண்க.

இனி இவர் ஒப்புயர்விலலாத ஞானந் தலைக்கூடிய உண்மை நாயனார் ஆதறகு முன்னரே பூர்வஜன்ம சமஸ்காரங்களினுன் அந்த ஞானத தலைப்பாட்டிறகு அருகராய் எழுந்தருளியிருந்தமையை,

"தந்தையார் களிமகிழ்சசி தலைசிறக்க முறைமையினுற்
சிந்தைமலர்ந் தெழுமுணர்விற் செழுங்கலையின் றிறங்களெல்லா
முந்தைமுறை மையிற்பயின்று முதிரவறி வெதிரும்வகை
மைந்தனார் மறுவொழித்த விளம்பிறைபோல் வளர்கின்றார்"

என்னுந் திருவிருத்தத்தாலும்,

"நில்லாத வுலகியல்பு கண்டுநிலை யாவாழ்க்கை
அல்லலென் றறத்துறந்து சமயங்க ளானவற்றி
னல்லாறு தெரிந்துணர்ந்து நம்பரரு ளாமையினாற்
கொல்லாமை மறைந்துறையு மமண்சமயங் குறுகுவார்" என்

னுந் திருப்பாட்டானும், சமண்சமயங் குறுகியபின்னும் அவருட் டாந் தலைமையெய்தி அவர்க்கு ஞானாசிரியராய்ப் புத்தரையும் வாதில் வென்று தாம் புக்கசமயம் தாபிக்கும் பேராற்றலுற்று விளங்கினமையானும் உணரப்பெறும்.

இந்நாயனார் சிவாக்ஞைபால் சூலைநோயுற்றுத் தமது தமக்கையாரை யடைந்து விபூதிவாங்கித்தரித்து திருவதிகை வீரட்டானத்தைச் சேர்ந்து சந்நிதானத்தை யடைந்தமாத்திரத்தே ஞானந் தலைக்கூடி ஞானவாக்குவியாய் "கூற்றாயினவாறு விலக்ககிலீர்" என்னுந் திருப்பதிகம் பாடியருளினாரன்றோ? விளக்கின் சந்நிதியையடைந்த கர்ப்பூரம தீக்கொளுவி யெரியுமாறுபோல சிவசந்நிதியை யடைந்த மாத்திரத்தே இவர் சிவஞானியாயினமை காணப்பெறுதலின் இவருத்தமோத்தம பரிபக்குவமுடையவர் என்பதும் சகலருக்கு மானுடச்சட்டைசாத்திக் குருமூர்த்தியாய் அனுக்கிரகிக்கும் முறைமையினன்றி இவருக்குச சிவபெருமான் நேரே அருளியபடியின் இவருக்கருளிய தீக்ஷை ஆதார தீக்ஷையன்றி நிராதார தீக்ஷையாமாறும் அந்நிராதார தீக்ஷையும அநந்ததேவநாயனார் முதலியோர்க்கு பதங்களை யுதவுவதும், வீடுபேற்றை யுதவுவதும் என விருவகையாதலின் இவைதமமுள் இந்நாயனார் அடைந்தது பிந்தியதேயாமென்பதூஉம உணர்க.

மாங்காய் துவர்ப்புப் புளிப்பு முதலியனமாறிக் கனிந்து தீஞ்சுவையுறுமாறுபோல இவரிடத்தும் பதிந்த திரோதானசத்தி சிவஞானசத்தியாய் மாறியருளியதையுங்காண்க. சூலைநோய் திரோதானசத்தி. இது ஆதிசத்தி எனவுங் கூறப்பெறும். இச்சூலைநோய் தமக்குப் பேருபகாரமாயினமையை நாயனார் மிகப்பாராட்டி அதற்குச் செய்யும் பிரதியுபகார மாமாறொன்றில்லை எனறிரங்குவதை "பொய்வாய்மை பெருக்கிய புன்சமயப் பொறையிலசமணர்சர்புறத்

துறையாம், அவ்வாழ்குழியின்கண் விழுந்தெழுமா றறியாது மயங்கி யவம்புரிவேன், மைவாச நறுங்குழன் மாமலையாள், மணவாளன மலர்க்கழல் வந்தடையும், இவ்வாழ்வு பெறத்தரு குலேயினுக் கெதிர் செய்குறையெனகொலெனத் தொழுதார்".

என்னுந் திருவிருத்தத்தா லறிக.

இதனாலும் இவர்திருவவதாரச் சிறப்பும், திருவருள் பெற்ற சிறப்பும் விளங்குமாறு காண்க. இன்னும் விரிக்கிற் பெருகும்.

இவர் திருவேடச்சிறப்புச் சிறிது கூறுதும்.

திருநாவுக்கரசு நாயனார் தமது தமக்கையாராகிய திலகவதியாரால் நீறளிக்கப் பெற்றது முதல் திருவடியடைந்த எல்லை வரையும் உத்தமோத்தமமாகிய சிவவேடப் பொலிவுடையாராய் எழுந்தருளியிருந்தனர் இதற்குப் பிரமாணம்:—

"நீற்றுணிறைவாகிய மேனியுடன்"-எனவும், "விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே" எனவும்,

தூயவெண் ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமு
நாயகன் சேவடி தைவருஞ் சிந்தையு நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும் பதிகச் செஞ்சொன்
மேயசெவ் வாயு முடையார் புகுந்தனர் வீதியுள்ளே" எனவும் வருவனவற்றானறிக

வாகீசர் மற்றையோர் போலாது மனமொழி மெய் என்னும் மும்மைக்கரணங்களாலும் திருத்தொண்டு செய்து அவ்வாறு செய்தலைப் பிறர்க்கும் வற்புறுத்திய பெருந்தகைமையும் இவரது பிரபாவத்தினை மகிவிக்குமாறு காண்க.

மும்மைக் காரணங்களாலும் பணி செய்தமையை

"மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன், மெய்யுற்ற திருப்பணி செய்பவராய் விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே, மெய்யுற்ற பிசான மருவுணர்வு மீறின்றி பெருக

திரு வாசகமுங், கையிற்றிக ழும்முழ வாரமுடன் கைத்தொண்டு கலந்து கசிந்தனரே."

எனத் திருத்தொண்டர் புராணங் கூறும்.

சிவபெருமானைச் சிந்தித்தலோடு திருவாய்மொழி ருத்திரமுஞ் செய்தும் அவற்றோடமையாது கைத்தொண்டு செய்யும் பெருமை யினாலேயே இவர்க்கு திருவீழி மிழலையில வாசியில்லாக்காசு" அருளினோமென்று சிவபெருமானுஞ் சொல்லியருளினார்.

இவரது மும்மைக் கரணத் தொண்டின் சிறப்பினை நோக்கித் திராவிட பாடியக்காரர்:—

"இடையறாப் பேரன்பும் மழைவாருமிணை விழியும் உழவாரத்தின் படையறாத் திருக்கரமுஞ் சிவபெருமான் திருவடிக்கே பதித்த நெஞ்சும்; நடையறாப் பெருந்துறவும் வாகீசப் பெருந்தகைதன் ஞானப் பாடற், றொடையறாச் செவ்வாயுஞ் சிவவேடப் பொலிவழகுந் துதித்து வாழ்வாம்"

என்றும், சிவாநுபூதி மானாகிய தாயுமான சுவாமிகள்.
"ஏரின் சிவபோக மிகவிலர்க்கே யென்னவுழ
வார் படைகொள் செங்கையர் தாள் வாரம் வைப்ப தெந்நாளோ" எனவும், பிறரும் பிறபடியும் கூறுமாறு காண்க.

இவரது தேவாரங்கள் பரமசிவனுக்கும் மிகக் பிரீதியை விளைத்து உவப்பிக்கும் தன்மை யுடையன வென்று அறியற்பாலன. இதனை வேதாரணியத்தே வேதங்களாற் பூசிக்கத் திருக்காப்புச் செய்யப் பெற்ற திருக்கதவினைத் திறக்க இவரைப் பாடியருளுமாறு ஞானபோனகர் பணித்தருளிய போது பத்துப்பாடல் நிரம்பிய பின்னும் திருக்கதவு திறக்காமல் இருக்கப் பின்னரிவர் "இரக்கமொன்றிலீர்" என்று அரிந்து வேண்டித் திறந்தருளினார்.

இவ்வாறு செய்தது இவரது பாட்டின் சுவைப்பயனைத் துய்க்குமாறு பற்றியே யென்பார் "பாடற்பயனதுய்ப்பான்-றெண்ணீறணிந்தார் திருக்காப்பு நீக்கத்தாழ்க்க" என்றார். சண்டு மிவர்மகிமை

யே பிரகாசிக்கின்றமைகாண்க. அன்றியும் இவர்பாடல் ஓதின்முத்தி மெய்ப்பயன் பெறுதற்காவனவாம்'' என்பதனை "வீட்டிற்கு வாயி லெனுந் தொடைசாத்து சொல்வேந்த'' என்னும் ஆன்றோர் வாக்கும் வலியுறுத்தும்.

சிவபெருமானார் சிவஞானந்தலைக்கூடி சிவசமானராய் விளங்குஞ் சிவஞானிகளால் தாஞ்செய்யும் பஞ்சகிருத்தியங்களையும் செய்விப்பர் என்னும் ஞானசாத்திரக்கருத்துக்கிசைய வாகீச மூர்த்தியும் சிவஞானந்தலைக்கூடி சிவ சமானராய் விளங்கிய மாஹா மூர்த்தியாய் பஞ்சகிருத்தியங்களையும் செய்தருளினமையை

"கொல்கரியி னீற்றறையி னஞ்சிற் கொலைதவிர்த்தல்
கல்லே மிதப்பாய்க் கடனீந்தல்—நல்ல
மருவார் மறைக்காட்டில் வாசறிறப் பித்தல்
திருவாமூ ராளி செயல்,, என்னுந் திருக்களிற்றுப்படியா

ரானறிக. இந்நாயனார்—உடல் பொருள் ஆவியாதிகளில் கொஞ்சமும் பற்றில்லாதிருந்தவர். இதனை:— அப்பூதியடிகணாயனார் தங் தருமங்களை யெல்லாம் இவர் பெயரால் நிறுவ அதனைப் பார்த்து வியர்த்து அவரை யடைந்து அவர்தன்புக்குவந்தருளினமையாலும், உழவாரத்திருப்பணி செய்யுமிடங்களிற் கிடந்த விலையிலா இரத்தினங்களைப் பருக்கைக் கற்களோடு வாரியெறிந்தமையாலும், அரம்பையாதியர் செய்த மாயாவிலாசங்களைக்கண்டு "ஆட்டுண்பே னல்லேன்'' என்றருளினமையாலும், தமது சரீரவுறுப்புக்களெல் லாம் சிதைவுறத் திருக்கயிலாய யாத்திரைசெய்தபோது சிவபெருமான் தோன்றித்திரும்புமாறு சொல்லியருள ; "மாறுமிவ்வுடல் கொண்டு மீளேனென மறுத்தார்'' ஆகலினாலும் பிறவாற்றானும் அறியலாகும். இன்னுமிவர் செய்கை ஒவ்வொன்றினையும் தனித்தனி யெடுத்துப்பாராட்டிப் பார்க்கும்போது இந்நாயனாரது மஹிமையெல்லையின்றிப் பெருகுமாற்றான் இம்மட்டினிறுத்துதும்.

மு. சாம்பசிவ நாயனார்,
சாலிய மங்கலம்

அறம்.*

வினையினீங்கி விளங்கிய அறிவன்றனது பேரருள் விளையாட்டிற் கிலக்காகவமைத்த இந்நிலவுலகத்துத் தோன்றிய சேதனகோடிகள்பலவற்றுள்ளும், ஓரறிவே முதல் ஆறறிவு உயிருந்தன்பாலொருங்கே யமையப்பெறும் இவ்வரும்பெறல் யாக்கையை முன்னரீட்டிய நன்னர் வினையாற் பெற்றுள்ள நாம், அதற்கேற்ற பெற்றித்தாய வுத்தம புருடார்த்தங்களைக் கொண் டின்புறல் ஆவசிகமாகும். அங்ஙனங் கோடற்குரியன யாவையோவெனின், அறம், பொருள், இன்பம், வீடு எனு நான்கேயாம். இவற்றை நன்குதெரிந்து அடைந்து பயன்றுய்த்தலை எழுதாக்கிளவியாதிய பழுதிலா வாய்மையுடைய நூல்களின் கருத்தாகும். அன்றியும் ஒருவற்குக் கூறற் கேட்டலாதியவற்றா னெய்தும் பரமபிரயோசனமும் இவையே யெனற்கு "அறம்பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே" என்னுஞ் சூத்திரமே சான்றாகும். ஆதலான் மேற்கூறிய வுறுதிப்பொருள்கள் நான்கனுள்ளும், அறமெனப் பெயரிய முதலா முறுதிப்பொருளானது ஏனைய மூன்றனுள்ளும், பொருளின்பத்தை இம்மைக்காக்கியும், தனித்துள்ள வீட்டின்பத்தை மறுமைக்காக்கியும் எக்காலத்தும் எவராலும் எவ்விடங்களினும் போற்றிப் பாராட்டும் பெருமை பெற்றும எனறுமழியா நிலைமைத்தாய் விளங்கித் தன்னையொப்பதோர் பொருள் பிறிதின்றெனச் சிறந்து நிற்கின்றதெனபதொருதலை. இத்தகைய வுத்தமப்பொருளாகிய அறத்தை நாமிங்கு ஆராயப்புகின் அது நான்கு பிரிவிலுளடங்குமெனக் கண்டுணரலாம். ஏன்லே? (1) அறமின்னதென்பதும், (2) அஃதின்றியமையாததென்பதும், (3) அதனைக் கொண்டொழுகல் முறையிதென்பதும், (4) அதனாலெய்தும் பயன் ஈதென்பதும் ஆகும். அவற்றுள்,

---

* இது விரோதிகிருது வைகாசிமீ 30உ கூடிய மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையில் மகிபாலன்பட்டி ஸ்ரீ மு. கதிரேசச் செட்டியாரவர்கள் அக்கிராசனத்தின்கீழ் இதன் ஆசிரியரால் படிக்கப்பட்டது.

(1) அறமென்பது மநுமுதலிய நூல்களுட் கூறியாங்கு விதித்தன செய்தலும் விலக்கிய வொழிதலுமாம். அஃது ஒழுக்கம், வழக்கு, தண்டம் என மூன்று பகுதியதாய்த் தக்காரால் அவ்வக் காலத்துக்குத் தக்கவாறு ஏற்குமிடந்தோறும் ஓரளவைப்பெறுதும் பெறுதும் கொள்ளப்படுகின்றது என்று மழியாது இக்கூறும் நமசெய லென்க

அறம், நன்று, தருமம் என்பன ஒருபொருட் சொற்கள். இவற்றுள் "அறம்" என்பதற்குப்பொருள் யாதெனின், அறு-அம் எனப் பகுதி விகுதி பிரித்து அறுத்தற்கும் அறுதற்கும் உரிய செயலென இருவகை வினையையும் தழுவி நிற்பதோர் தொழிற் பெயராம். அஃதாவது, ஒருவன் பிறன் அவாஅறுத்தற்கும் தன் அவா அறுதற்குங் காரணமாய் நிற்குமென்பது பெறப்படும். இஃதின்னிலை துறவுநிலையெனு மிரண்டிற்கும் பொதுவென்பதனை "அவாவறவளித்தலாலறமெனப்படுமே." "அவாவறவழித்தலா லறமெனப்படுமே"யெனு முன்னோருரைச் சூத்திரங்களே நன்கு வலியுறுத்தி நிற்கும். இக்கருத்துப்பற்றி யன்றோ நம் பொய்யாமொழியார் தம் மெய்யாம் பனுவலாகிய திருக்குறளின்கண் அறன்வலியுறுத்தலென, இன்னிலைக்கும் துறவுநிலைக்கும் பொதுப்பெயரிட்டு வழங்கினமையும் பின்னர் அதனை விளக்கவேண்டி இல்லறத்திற்கு ஈகையும், துறவறத்திற்கு அவாவறுத்தலையுங் கூறிப்போந்ததுமென்க.

"நன்று" என்பதற்குப்பொருள் யாதெனின், எத்திணைக் கண்ணுள்ள எவ்வுயிர்கண்மாட்டுந் தன்னாலியன்றவரை யெவ்வகையானுந் தீங்கின்றாந் தொழில்புரிதல்.

"தரும"மென்பதற்குப் பொருள் யாதெனின், செய்யத்தக்க தொன்றைச் செய்தல். ஆகவே ஒருவன்முறையே இல்வாழ்க்கையுடையனாகித் தென்புலத்தாராதியோர்ப்பேணி யம்முறையாலன்றேல் யாவராயினும் வானுறையுந் தெய்வம் போன்று வணங்கவுரியானாதற்கும் அதற்கு மறுதலையாய துறவுநிலைக்கணின்று காமாதிகளை யறவேயொழித்து அப்பெற்றியாற் பற்றிகந்து பெருவீட்டினைச் சார்ந்து என்றுங் குன்றாப் பேரின்பந் துய்ப்பா

னுதற்கு மீதுவே நன்றெனுந் துணையாயுறுதலின் இதனினும் விழுமிதாகுஞ்செயல மற்றுங் கண்டிலமெனப் பலரோ ரறிந்தொழுகற்குப் பற்றுக்கோடாக நிற்பதென்க.

இனி, இவ்வறமாகிய பைங்கூழ் இன்மொழி யென்னும் விளைநிலத்துள் ஈகை என்னும் வித்திடைத்தோன்றி அன்பென்னு நன்னீரானும் வாய்மை யென்னும் எருவினானு மினிது வளர்ந்தோங்கிக் கடுமொழியாகிய மிடைகளை யொருவி அழிவிலின்பமென்னும் போகங்களை யுவட்டாதளிக்க வல்லதன்றோ? அன்றியும் பிறராக்கங் கண்டு மனம் பொறாமையும், பிறர்பொருள் வெளவலும், இன்னாச் சொற்களும் ஆகிய இவற்றைக் கடிந்து நடைபெறும் ஆற்றலுடையதாம். இப்பேரறம் முன்னோர்களாற் பலவாறாகவிரித்துரைக்கப்பெற்றொழுகக்கிடந்தனவெனினும் முக்கியமாக மானதம், வாசிகம், காயிகம் என்னு மூன்றனுள்ளே யாவும் அடங்கும். இவற்றுள், மானதம் மனத்தாற் சிந்தித்தல். வாசிகம், வாக்கினாற் சொல்லுதல். காயிகம், சரீரத்தாற் செய்தல். இம்மூன்றல்வழிப் பிறவெவற்றானுங் கைகூடாதென்பது தேற்றம்.

எனவே யிதனை நோக்குவார்க்குப் பிறப்பு வகையான் மூன்றெனவும் இட வகையானிரண்டெனவும் விரிவகையான் முப்பத்திரண்டெனவும் அறியலாகும். இம்மூன்றால் யாமெளிதிற் பெறுமொரு நற்பெரும்பயனை யுணர்த்தப் புகுந்த தமிழ் மறைவள்ளலாராகிய நம்மாழ்வார் "மாலை நண்ணித்தொழுதெழுமினோ வினைகெட" எனவும், சைவமத தாபகராகிய நாவுக்கரசர் "நிலைபெறுமாறெண்ணுதியேனெஞ்சே" யெனவும் எங்ஙனுமுழக்கியிட்டமையீண்டு நன்கு கவனிக்கற்பாலன. ஆதலா னறமென்பது எவ்வகையானு நன்மை பயக்குமோ ராக்க மென்பது இதனாற் பெறப்படுமென்க.

இனி இரண்டாம் பிரிவினைப்பற்றிக் கூறுங்கால் மேற்கூறிய அறம் தன்னையொருவன் மனமொழிமெய்யாற் சிறிதும் பிறழ்தலின்றி யொற்றுமை யுடனியற்றிவரின் அன்னோற்கிறுதி வந்தவிடத்துந் தானிறுதியின்றியவன்செல் பிறப்புத்தோறுங் கலந்து கூட்டுறவுசெய்து இயன்றவரையும் பயன்றர வல்லது. இதனிற்

சிறந்ததுணை யிதனை யல்லது யாம் யாண்டுக் காண்குவோம்? இவ்வறத்தைப் பெற்றோரே பெருமை முதலிய யாவையு முற்றோராவர். இதனானன்றோ நமதருமை மாதாநுபங்கியாரும் தமதருட் பெருநூலுள் "அறத்தினூஉங் காக்கமுமில்லை" யெனவும் "அதனை மறத்தலினூஉங் கில்லை கேடு" எனவுந் திருவாய் மலர்ந்தருளினர். "அறமேதுணை" யென்பதற்கு "ஈட்டிய வொண்பொருளு மில்லொழியுஞ் சுற்றத்தா" ரெனவும் "அத்தமும் வாழ்வு மகத்துமட்டே" எனவும் பிரபல நற்பாக்கள் எடுத்துக்காட்டுக்களாகச் சிறந்து விளங்கும். அன்றியும் மானுட யாக்கையினர்க்கென்றும் மறுபிறப்புண்மை சற்றும் பொருந்தாதெனக் குழறும் நாத்திகரும் தத்தமனத்தாற் செப்பமுறநாடிப் பார்ப்பரேல் அன்னோர்க்கு இவ்வுத்தம தருமச்செயலின்றன்மை எட்டுணையேனுஞ் சிறிது விளங்காமற் போகாது. அறமின்றெனில் யாவுமின்றாம். அன்றி "அறவாழியந்தண" னெனவும் "அறவாநின்னாணை கண்டா" யெனவும் "அறவோ" ரெனவும் பல தண்டமிழ்ச் சுருதிகள் இறைவனையும், அவனடியார்களையும் ஏனையுலகவாழ்வினையும் இவ்வறத்தோ டுரிமைப்படுத்தி கண்டோக்கியாக முறையிட்டிருத்தலறிதற்பாலது, இன்னுமிவ்வறம் தன்னினின்றும் பிழைத்தாரைக் கடவுளுருக்கொண்டொறுக்கு மென்பர் பெரியோர். என்னை?

(இராமாவதாரம் ஆரணியகாண்டம் மாரீசன் வதைப்படலம்.)

நாரங் கொண்டார் நாடு கவர்ந்தார் நடையல்லா
வாரங் கொண்டார் மற்றொருவர்க்காய் மனைவாழுந்
தாரங் கொண்டா ரென்றிவர் தம்மைத் தருமந்தான்
ஈருங்கண்டாய் ...."

என்பதனாலுணர்க. ஆதலானிஃதொருவற் கின்றியமையாதென்பது துணியப்படும்.

இனி, மூன்றாவதாகிய செயல்முறைகளைக் கூறப்புகின் ஒருவன் மேற்கூறிப்போந்த அறவகையுள் யாதேனு மொன்றைச் செய்யத்தொடங்குங்கால் முதற்கண் தானிதனைச் செய்யவேண்டு மென்னுந் துணிவான சிந்தையும் பின்னரதனைச்செய்ய வொழுக்கமும்

அஃதிடையறாது நடந்துவருதற்காம் கருவிகளாகிய பொருளிடங் காலங்களைக்கொண்டு யாண்டுந் தேய்வின்றி யியற்று முறைமைப்பும், தக்கார்தகாரிவரெனுமறிவும், யாரிடத்து மொருபடித்தாயவுள்ளன்பும், இவற்றை யுசிதகாலத்துக்கொண்டொழுகல் வல்ல கல்வியறிவும், கடவுட்போற்றல் பெரியோர்ப்பேணல் சுற்றந்தழால் முதலிய நற்குணங்களும் பிறவும் வாய்ந்து "மனத்துக்கண் மாசிலனாக" வியற்றுதலே முறை. அங்ஙனமாயவறந்தான்றன்னை வளர்ப்போன் பொருளளவிற்குத்தக்கவண்ணம் பெருமை சிறுமை பெற்றிலங்கும். ஆயினும் அன்னதற்கினைத்துணை 'யென்னும் வரையறையின்றி பெறுவார் சால்பின் வரைத்தாமென்பா மேலோர். இதனை, "உறக்குந்துணைப்" தென்னும் நாலடிச்செய்யுளானும் "ஞானமுன்னிய நான்மறையாளர்கைத்தான மென்னத்தழைந்தது நீத்தமே" என்னுமிராமாவதாரச் செய்யுளானுமறிக.

இனி யிவ்வாறொருவன் நன்காராய்ந்து செய்யாவழித்தான்றொடங்கியவறஞ் சிதைந்து அதனறம் பிறர்ப்பழிக்கப் பேதுறலன்றி யிருமை யின்பங்களையுமிழந்து ஒரு பிரயோசனத்திற்கு முதவாது இந்நிலவுலகத்துப் பெரும்பொறையாய் விடுதல் திண்ணமே. ஆகையா லொன்றைச் செய்யக் கருதின் நன்கெண்ணியே பின்னதனை முயலத்தொடங்கல் வேண்டும் "எண்ணித்துணிக" வென்றார் செந்நாப்போதாரும். இத்துணைவிழுப்பமுற்ற தருமத்தினை நாம் கடைப்பிடித்தொழுகவேண்டுங்கால் காலதாமதமின்றியே செய்தல் நன்று, பின்னர்ச்செய்வமெனிலோ "நீரிற்குமிழி இளமை நிறைசெல்வம் நீரிற் சுருட்டும் நெடுந்திரைகள், நீரிலெழுத்தாகும் யாக்கை நமரங்காள்!" என முன்னோர் கூறியாங்கு அழிதன்மாலையவாகிய இவ்வுடல் பொருளாதிய தம்பாலுறப் பெறுமக்கணமே செய்து பயனடைதல் மேலாகும். இதனைக் குறித்துக் கபிலரென்னும் புலவர் பெருமானுமொன்றேசெய்யவும்வேண்டும்,ஒன்றும்நன்றேசெய்யவும் வேண்டும். நன்று மின்றே செய்யவும் வேண்டும். இன்றுமின்னே செய்யவும் வேண்டும். அதான்று—நாளை நாளை யென்பீராகில்,

நாளை நம்முடைய நாளாவதுமறியீர் நீர் நமனுடை நாளாவது மறியீர்." எனவிரிதருரைத்தமையனறி, "நெருநலென்பது சென்ற, இன்றுஞ்செல்லாநின்ற, பின்னும் வருநாள்கண்டாரே. அதனால்-உள்ளது நாடுமின், இல்லது கோடுமின், வாழ்வில் இன்பம் புணர்மின் அதான்று. கீழையகத்துப்புகினும் புடையது, விசும்பின் மீடர்த்தலை யேறினும் மேலது. நேமிமால்வரைக் கப்புறம்புகினுங் கோள்வாய்த்துக கொட்குங் கூற்றதது மீளிக்கொடுநா விலக்குதலரிதே" எனவும், "பல் சான்றீரே பல் சான்றீரே" எனவும் பண்டைச் சங்கப் பெருநூல்களுங் கூறியிருத்தல் காண்க.

இன்னனஞ் சிறப்புற்றோங்கு மிவ்வறத்தை, எம்மதத்தினர் தாங் கைவிடற்பாலவர்? ஆதலானிவ்வறத்தை நீயிர் நன்கு தனித்தாராய்ந்து பல வேறு பிரிவுகளுள் முக்கியமாக வித்தியாசாலை நிறுத்தி, சபைகளைத் தாபனஞ்செய்து, கல்வியறிவொழுக்கங்களான்ற பெரியோர்களைக்கொண்டு நற்பிரசங்கங்கள் புரிவித்து, மதச்சார்பின்றி யெம்மதத்தினர்பாலுந் தொடர்புடைமையாகிய இத்தகைய நல்லவைகளை இவ்வவைக்களத்துக் குழீஇய பல நண்பருடன் நீங்கள் நாடோறும் பேணியியற்றுவிரின், அவற்றின் பயனை யாவரளவிடற்பாலார்? நான் இதுகாறும் கூறிய அறத்தின் பயனுக்கொருவாறாக ஓர் எடுத்துக் காட்டுவேண்டுமென நீயிர் மொழியின், இவ்வளமுடைய சன்மார்க்கசபை யொன்றே போதுமான சான்றென்க. ஆதலால் ஒவ்வொருவருந் தத்தமக்கியன்றவளவும் அறத்தைச் செய்யத் தொடங்குவதும், செய்ததனை யழியாது நிலைநிறுத்துவதும், அதன் முறை தெரிந்தொழுகலுமே பெரும்பாக்கியம்.

இனி இவ்வறப்பயனைப்பற்றித் தனித்தனியே சொல்லப்புகின் மிக விரியுமாதலான், அதனைச் சிறிது கூறிமுடித்தல் ஈண்டைக் கேலும்.

"தருமமே தனித்த ஞான்று தக்கதோர் துணைய தாகுந்
தருமமே பொருள்கள நாளுந் தந்திடும் வருணா நாளுந்
தருமமெய் யாகச் செய்யுஞ் சமயமா நாடனே மற்றுந்
தருமமே காக்கும் வேந்தர் தட்முடி யிடறுந் தாளாய்."

எனத் திருப்பரங்கிரிப் புராணமுடையாரும், "அறத்தாறிது வென வேண்டா சிவிகை பொறுத்தானோ டூர்ந்தானிடை" யெனத் தெய்வப்புலமை வள்ளுவனாரும் தெளித்துரைத்தனர். அன்றியும் "சிறப்புடை மரபிற் பொருளுமின்பமும் அறத்து வழிப்படூஉந் தோற்றம்போல" வென வெடுத்துக்காட்டாகவமைந்த பல சான்றோர் செய்யுட்கேற்பப் பலப்பல பேறுகளை இனிதினளிக்கும் பெற்றியிற் சிறந்து விளங்குமாற்றானும் பாண்டவரின் முனோனாகலானிருவருள்ளும் முன்பிறந்த கன்னன் இவ்வறத்திற்கு முதற்காரணமாய ஈகையொன்றையே யங்கங்கொண்டு, அதனாற் பேறுபெய்திய தன் சிறப்பானே தனது பகைவரைப் புறங்கொடைகண்டு இறுதிக்காலத்து மனமொழி சிறிதுந் தளர்வின்றி யிருகண்களால் கடவுளின் திருக்கோல தரிசனைசெய்து என்றுங் கலங்காப் பெருநகரம் புக்க சீரானும் அன்னோன்பின்னோன் யார்மாட்டுங் கண்ணொளி நற்சிந்தை இவைகளைக்கொண்டு, அத்தகைய வறப்பேற்றாற் சகல மாயாகாரண ரூபியாயுள்ள கண்ணனையுந் தூதாளாகச்செய்து, இறுதியிற் செய்யற்கரிய செய் தேவரும்புகழ்தற்கரிய நிலையாகிய இந்த பௌதிக சரீரத்துடன் துறக்கஞ்சென்ற பெருமையானும் பரிதிகுலத்துதித்த அரிச்சந்திரனென்பான் வாய்மை ஒன்றையே நிலையாய அறமெனக் கொண்டு அத்துறையினர்க்கு நேர்ந்த இடையூறு பலவற்றால் தனது பல்வளமலி தென்புலம் நன்னகர் துறந்தும், தன் அருமைத் துணைவியும் செல்வப்புதல்வனும விலையாகி மறையோன் கைப்புகத் தானும் இழிதொழிற்குரிய பறையனுக்கடிமையாகிச் சுடுகானம் காவலியற்றியும் இன்னும் அடாதன புரிந்தும் படாதன பட்டும் கைவிடாதொழுகி அதனைப் பிழைதலின்றி நடாத்தப்பெற்ற தன்மையால் தானமுபகாரத நிலையு முறையே காணப்பெற்று, என்றும் நிரதிசயின்பமெய்திய பேற்றானும், மற்றும் பல தேவருமிருடியரும் மானுடரும் பிறரும இத்தருமத்தானே சீர்பெற்றுயர்ந்த செவ்வியானும், இதன் பயனின்னதென ஒருதலையாகவுரைக்கப்படும்.

ஆகையால் இப்பெருஞ்செல்வமும் பெருந்தன்மதியார், யானிதுவரையுங்கூறிய, அவ்வறத்தை நாளும் விடாதுபேணி, அதன் பயனை யிவணின்றுத் துய்த்துப் பெருவாழ்வுடன் நன்கினிதிலவுலகில் விளங்குகவென்று எல்லாம் வல்ல முதற்கடவுளாகிய ஸர்வேச்வரனது இணையடித்தாமரைகளைச் சிந்தித்து வந்திக்கின்றேன்.

நெடுங்கை. திரு. இராமஸ்வாமி ஐயங்கார்,
தமிழ்ப்போதகாசிரியர் [illegible]

விருந்தோம்பல். *

கடல் சூழ்ந்த இந்நிலவுலகின்கண் உள்ள மக்களெல்லாவர்க்கும் பொதுவாக பிரமசரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என நான்கு ஆச்சிரமங்கள் உறுதிப்பயன்களை யெய்தற்கு இன்றியமையாச் சாதனங்களாக ஏற்பட்டிருக்கின்றன. அவற்றுள் பிரமசரியம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்னும் மூன்று ஆச்சிரம வாசிகட்கும் விரும்புந்தோறும் காலமறிந்து உண்பதற்கு உணவும், உடுப்பதற்கு ஆடைமுதலிய பொருள்களும் உதவி உபசரித்து வருபவன் இல்லற ஆசிரமவாசியொருவனேயாவன். இதனை "இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு, நல்லாற்றி னின்ற துணை" யென்று திருக்குறளினும் "இத்தகைய நால்வர்களின் மூவருக்கு இறந்தார்க்கும், அத்தமுதலற்றார்க்கும் ஆதாரமாதலினால் உத்தமமாம் இல்லறமே வாழ்வினுக்கும் உயர்கதிக்கும், வித்துமாந் துறவறத்தின் வேறுமாம் எனுமவேதம்" என்று திருக்குற்றாலபுராணத்தினும், கூறியிருக்கின்றமையானும், உலக அனுபவத்தினானும் அறிக. இனி இத்துணைச் சிறப்புவாய்ந்த இல்லறத்தின்கண் நின்றொழுகுவார் செய்தற்குரிய அறங்கள் மிகப்பலவெனத் தர்மசாஸ்திரங்களிலே விரித்துக் கூறப்பட்டிருப்பினும், அவற்றுள் முக்கியமாய்ச் சிறப்புற்று விளங்குவது விருந்தோம்பலேயாம். விருந்தோம்பலாவது, தமதில்லிற்கு வந்தோர்க்கு நல்லுணவு முதலியவற்றை உதவி உபசரித்தலெனப் பொருள்படும். இல்லறத்தார் செய்தற்குரிய ஏனைய தாமங்களினின்றும் இவ்விருந்தோம்பலானது தலைமையுடையதாய்ச் சிறப்புற்று விளங்குதற்குக் காரணம் என்னையெனில், பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என்கின்ற ஐவகை யாகங்களுள் ஒன்றாகிய மானுடயாகமே விருந்தோம்பலென்னும் பெயரினைக்கொண்டு விளங்குகின்றமையாலென்றறிக. இதுபற்றியே தெய்வப்புலமைத் திருவள்ளுவனாரும் "இனைத்துணைத் தென்பதொன்றில்லை விருந்தின், துணைத்துணை வேள்விப் பயன்" என்றும் "பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பார் விருந்தோ

---

* இது மேலைச்சிவபுரிச் சன்மார்க்கசபையி னிரண்டாம் ஆண்டு நிறைவேற்றக் கொண்டாட்டத்திற்காகக் கூடியபேரவையிற் படிக்கப்பெற்றது

ம்பி, வேள்வி தலைப்படா தார்" என்றும் கூறியருளினர். இனி இத்தகைய விருந்தோம்பலும் இருவகைப்படும். அவற்றுள்ஒன்று தன்வர்க்கத்தார் தன் மனைவி வர்க்கத்தார் ஆகிய பந்துக்களை யுபசரித்தல். மற்றொன்று தம் வருணத்தவரில் அன்னியர்கள், மற்றைய வருணத்தார்கள், மற்றைய ஆச்சிரமத்தவர்கள், வறியவர்கள் ஆகிய இன்னோரை யுபசரித்தல். இவ்விரண்டனுள்ளும் பிற்கூறியவர்களை யுபசரித்தலே மிகச் சிறப்புடையதெனப்படும். எங்ஙனமெனில் எற்போர்க்கு இம்மியளவும் பொருளீயாத உலோபகுணமுடையோரும் தம்மிடம் தம் பந்துக்கள் வருவரேல் யாதொரு முட்டுப்பாடுமின்றி செவ்வனே யுபசரித்தனுப்புவார்கள். அஃது எதன் நிமித்தமோவெனின் தாமும், அன்னோர் இல்லிற் புகுங்கால் இவ்வண்ணமே அவர்களால் உபசரிக்கப்பெறுகின்றமையாலென்றறிக. இனிப் பிற்கூறியவர்களை யுபசரிக்கும் கிரமம் எவ்வாறெனில் தம்பந்துக்களல்லாத அன்னியர் பிறவருணத்தவர், சிவனடியவர், பிரமசாரியர், வானப்பிரஸ்தர், சன்னியாசிகள், தரித்திரர், உத்தமக் கவிஞர், புராணப்பிரசங்கியர் முதலியோர்களில் யாவரேனும் தம்மில்லிற்கு விருந்தாய் வருவரேல் அவரவர் பெருமைக்கேற்பத் தாமே எதிர்கொண்டும் தன்னடிமைபால் எதிர்கொள்வித்தும் அழைத்துவந்து அவரவர்க்குத் தகும் ஆசனங்களில் இருக்கச்செய்து "ஒரு விருந்தினர்க்குரைசெய முகமனேடொப்ப" என்றபடி இனிய வார்த்தைகளினால் உபசாரஞ்சொல்லிப் பின் தாம்பூலங்கொடுத்து வந்தவினையத்தை யுசாவிப் பின் மிக இனிமையாகச் சமைக்கப்பட்ட அறுசுவைப் பதார்த்தங்களோடு கூடிய அன்னபானாதிகளை உண்பித்து உபசரித்தல் வேண்டும். இவ்வாறு தினமேபோல தம்மில்லிற்கு விருந்தாய் வந்தோர் எத்தனை தினமிருப்பினும் அத்தனை தினமும் அருவெறுப்புஞ் சலிப்புமின்றி மிக்க அன்போடும் உபசரித்தனுப்பல் வேண்டும். தம் வீட்டிற்கு வந்த விருந்தினர்க்கு அன்னமளித்து உபசரிக்குங்கால் தானும் தன் மனைவியும் தங்கள் மனத்தின்கண் இருந்த அன்பை முகத்தின்கண் தோன்றும்வண்ணம் முகமலர்ச்சி காட்டுதலேயன்றித் தமக்கு வாயின்கண் தோன்றுகின்ற இனிய வார்த்தைகளினாலும் காட்டல் வேண்டும். அங்ஙனங் காட்டாதொழிவரேல் அந்த விருந்தினர் மனமாழ்கி மிகவுஞ் சோகப்பெற்று

எற்றிற்காக நாம் இவர்கள் இலைக்கு வந்தனம் செய்து மிக வருந்த நேரிடும். இதனை "வந்தவிருந்து மலராத முகநோக்கு முன்குழையும்,அந்த அடைவாலகத்தன்பை யலர்ந்த முகத்தால் வெளிப்படுத்தி, சந்தமணிவா யிலுந்தோன்றச் சற்றும வஞ்சக கலவாமே, யுந்துஞ்சுவையின் மொழியென்று முறைதவலேவண்டும பயன் வேண்டின" என்று விநாயகபுராணத்திலும், "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து, நோக்கக் குழையும் விருந்து" என்று திருக்குறளினும் கூறினமையா னுணர்க. இனி இத்தகைய விருந்தோம்பலைக் கடைப்பிடித் தொழுகுவோர்க்கு இன்றியமையாச் சாதனப்பொருள் யாதென்னிலோ "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றும் "பெண்டிர்க் கழகெதிர் பேசாதிருத்தல்" என்றும கூறிய ஆன்றோர் வாக்கியப்படி புருடன் சொல்லிற்கு மாறுகொள்ளாடாத நற்குணம் அமையப்பெற்ற மனைவியேயாம். அத்தகைய மனைவியை ஒருவர் வாய்க்கப்பெறுவரேல் மேற்கூறிய விருந்தோம்பலானது யாதொரு இடையூறுமின்றித் தனையுள்காறும செவ்வனே நடைபெறும். இதனை "நற்குணநிறைந்த கற்புடை மனைவியோடு அன்புமருளுந் தாங்கி இன்சொலின் விருந்துபுறந்தர் தருந தவர்ப்பேணி" என்று சிதம்பர மும்மணிக்கோவையினும் "வினைகாந்துவந்த விருந்தோம்பி நின்றான், மனைவாழ்க்கை நன்று தவத திற்—புனைகோதை, மெல்லியல் நல்லாளும் நல்லள் விருந்தோம்பிச், சொல்லெதிர் சொல்லா ளெனின்" என்று அறநெறிச்சாரத்திலும கூறினமையாலுணர்க. இனி, இத்தகைய நற்குணமின்றித் தீய குணம் அமையப்பெற்ற மனைவியை யொருவர் வாய்க்கப் பெறுவரேல் அவர் எத்துணைப் பெருஞ்செல்வராயினும் காண்டற்கரிய பெருமானிலையுடையராயினும் அவைகளா லடையும் பயனை யிழந்து கொடிய பேய்வாழ்கின்ற காட்டினிடத்தே வசிப்பவரை யொத்து இல்லறத்திற்குரிய விருந்தோம்பலாதிய சற்கருமங்களைத் தினையும் ஒருங்கே செய்யாதொழிந்து மனத்தின்கண் மிக்க துக்கத்தை யடையப்பெறுவார்கள். இதனை "மஞ்சுநிலைக்கு மாடமாய் மாண்பமைந்த காப்பாய், விளக்கு நின்றிமைப்பி னென்னாம்? விளக்க, மாண்ட மனையாளை யில்லாதான் இல்லகம், காண்டற் கரியதோர் காடு" என்று நாலடியாரினும், "மனைமாட்சி யில்லாள்க

ணில்லாயின் வாழ்க்கை, யெனைமாட்சித் தாயினு மில்'' என்று திருக்குறளினும் கூறியிருக்கின்றமையா லுணர்க. இனித் தீயகுணங் அமையப்பெற்ற மனைவியைப்பிராரப்தகன்மபலத்தால் ஒருவர்வாய்க்கப்பெறினும் அவளை யொருசார்ப்படுத்தி, பாகஞ்செய்வா ளொருவளை அமைத்துக்கொண்டாயினும் வந்த விருந்தினரை யுபசரித்தல் அத்யாவசியம் என்பதை ஒவ்வொருவரும் நன்கறிதல் வேண்டும். இனி நமக்கு மோக்ஷமடைதற்குச் சாதனங்களாக எத்தனையோ ஆச்சிரமங்களிருக்க அவைகளைக் கைவிட்டு நாம் இவ்வில்லறத்தின்கண் நின்று பொருளீட்டுதல் எதன் நிமித்தமோ வெனனில், நம்மிடம் வந்த விருந்தினர்க்கு முகமலர்ச்சியோடும் இனிய உணவாதிகளை யூட்டி யுபசரித்தற்கேயன்றி வேறன்று. இனி, தன்னையுண்டவர்களை இச்சரீரத்தினின்றும் இவ்வுயிரை நீங்கவொட்டாது பாதுகாக்கும் சக்திவாய்ந்துள்ள கிடைத்தற்கரிய தேவாமிர்தமே ஒருக்கால் கிடைப்பினும் அதனையும் தன்வீட்டிற்குவந்த விருந்தினரைப் புறத்தே யிருத்திவைத்துத் தான்மாத்திரம் உண்ணல் விதியன்று. இதனை "இருந்தோம்பி யில்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற்பொருட்டு" என்றும் "விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா, மருந்தெனினும் வேண்டற்பாற் றன்று" என்றும் திருக்குறளிலும் "மருந்தேயாயினும் விருந்தோடுண்" என்று ஆன்றோராலும் கூறப்பட்டமையா லுணர்க.

இவ் விருந்தோம்பலினால்வரும், இம்மைப்பயன் பலவுள. அவையாவன:— தினமும் தம்மில்லிற்கு வருகின்ற விருந்தினரை யுபசரித்து வரும் நல்லோர்களது செல்வ வாழ்க்கையானது தாரித்திரமென்கின்ற பிரசண்டமாருதத்தால் மோதப்பட்டு எப்பொழுதும் சிதைவடையமாட்டாது. அன்னோரது மனையின்கண் ஸ்ரீ விஷ்ணுமூர்த்தியின் மார்பகத்தில் வீற்றிருக்கின்ற செல்வமகளாகிய திருமகள் இடையறாது நடனஞ் செய்துகொண்டிருப்பாள். இன்னும் அன்னோர்கிருகத்தில் விருந்தோம்பலாதிய சற்கருமங்களைச் செய்தற்கு சாதனமாகிய திரவியத்தை விர்த்திசெய்தற் பொருட்டு மூலதனம் ஏற்படுத்தி ஓர் வாணிபம் முதலிய செய்யாமலே திருமகள் கடாக்ஷத்தால் தானே திரவியம் விர்த்தியடைந்து

கொண்டிருக்கும். இதனை "வருவிருந்து வைகலு மோம்புவான் வாழ்க்கை பருவந்து பாழ்படுதலின்று" என்றும் "அகனமர்ந்து செய்யாளுறையு முகனமர்ந்து நல்விருந்தோம்புவானில்" என்றும் "வித்துமிடல் வேண்டுங் கொல்லோ விருந்தோம்பி மிச்சின் மிசைவான் புலம்" எனவும், திருக்குறளில் கூறியிருக்கின்றமையா லுணர்க.

இவ்விருந்தோம்பலினால் வரும் மறுமைப் பயன் அளவிடற்கரிதாய் மிக வளர்ந்தோங்கி நிற்கின்றன. எவ்வாறெனில் நாம் தினமும் "இவர் நம்மினத்தவர்" "இவர் புறவினத்தவர்" "இவர் தரித்திரர்" "இவர் தனவந்தர்" "இவர் தாழ்ந்த வருணத்தவர்" "இவர் உயர்ந்த வருணத்தவர்" என்கின்ற பேதம் பாராட்டாது நம்மிடத்து விருந்தாய் வந்தோர் யாவரேயாயினும் அவரவர்க்குத் தக்கவாறு விருந்தளித்து உபசரிப்போமாயின் அப்புண்ணியபலம் யாவும் ஒருங்கே திரண்டு யாதொரு பாபகிருத்தியத்தினையும் செய்யாது பரிசுத்தமனதோடு கூடி சன்மார்க்க நெறியில் நின்றொழுகுவார் எவரெனத் தேடிச் சென்று அன்னோரைக் கண்டு அழைத்துவந்து நம்மில்லிற் சேர்ப்பிக்கும். அங்ஙனஞ் சேர்ப்பிக்கப்பட்ட சன்மார்க்க நெறியுடையார்க்கு நாம் மனமகிழ்வோடு விருந்தளித்து உபசரிக்க எதுவாகின்றது. இவ்வண்ணமே பலமுறையும் அன்னோர்க்கு உபசரித்துவருவதனாலாய புண்ணியபலம் யாவும் ஒருங்கே திரண்டு அகப்பற்று புறப்பற்று என்கின்ற இருவகைப் பற்றினையும் அறவே யொழித்துப் பரிசுத்த ஆத்துமாவாய் விளங்குகின்ற மெய்ஞ்ஞானியர் எங்கிருக்கின்றார் என்று தேடிச்சென்றழைத்துவந்து நம்மில்லிற் சேர்ப்பிக்கின்றது. அவ்வாறு சேர்க்கப்பட்ட மெய்ஞ்ஞானியரை நாம்பார்த்தமாத்திரத்தே தரையிற்கொண்டு அவர்க்கு அர்க்கிய பாத்திய ஆசமனாதிகளை கொடுத்து அவரைத் திவ்யாசனத்திருத்தி இனிய மொழிகளால் தோத்திரஞ் செய்து பின் மிக இனிமையாகப் பாகஞ்செய்யப்பட்ட அன்னபானாதிகளை யருத்தி, உபசரிக்குமாறு எதுவாகின்றது. இப்படி அம்மெய்ஞ்ஞானியர்க்கு ஒருபோது அன்னமளித்தலினாற் கிடைக்கின்ற புண்ணிய பலத்தினையும் கோடி பிரமஞானிகளுக்கு ஆடை சந்தனம் புஷ்பம் முதலியவற்றையுதவி தானதருமாதிகளைச் செய்து அறுவகைச் சுவையுடைய அன்னபானாதிகளையருத்திப் புசிப்பித்தலாற் கிடைக்கின்ற புண்ணியபலத்தினையுஞ் சேர்த்துக்கூட்டிய பாகத்தின்

சமயமாமென்றும் யாவர்மனையிலேனும் மெய்ஞ்ஞானியாயுள்ளா ரொருவர் செல்வரேல் அவரைப் பார்த்தமாத்திரத்தே அம்மனைத் தலைவராது பிதிரர்களனைவரும் இதுகாறும் நாம் அமிழ்ந்திக்கிடந்த நிரயக்குழியினின்றுங் கரையேறி சுவர்க்கலோகத்தை யடையப் பெறுவோமென்கின்ற மகிழ்ச்சியினால் ஆனந்தக்கூத்தாடாநிற்பர் என்றும் மறைமுதலிய நூல்கள் முறையிடுகின்றன. இதனை "ஆடை யுமமுதுஞ் சாந்து மலரும் புனைதீபமுன்னாக் கோடிவேதியரைப் பூசை குறைவறச் செய்தாலும், மெய்ஞ்ஞானி தன்கைபிடித்திடும் பிச்சை தானும், நாடிடிற் சமமாமெனவேற நாதனால் நவிலுற்றானே" என்றும் "எவர்தன் மனையில் ஞானி யெய்திடு மவனைக்கண்டு, மேனிய பிதிரரெல்லாம விரும்பிநின்றாடாநிற்பா, பாவிய நரகமென்னும் படு குழியொருவியென்று, மேவிலா விடுபெறவேமென்றெழு முவகை யாலே" என்றும் முதநூலில் கூறப்பட்டமையாலுணர்க. இனி யித்தகைய பெருமைவாய்ந்த மெய்ஞ்ஞானியர்கட்கும் நாம் பல முறையும் விருந்தளித்து உபசரித்தலினாற் கிடைக்கின்ற புண்ணிய பலம் யாவும் ஒருங்கேதிரண்டு நம்மனதைப் பரிசுத்தப்படுத்தி சித்த சுத்தியுண்டாக்கி ஞானசுடர் கொளுத்தி அம்மெய்ஞ்ஞானியரை யொப்பச்செய்து பின் சிவத்தோடு இரண்டறக்கலத்தலாகிய மோக்ஷவீட்டினையும் அடையும்படி செய்யாநிற்கும். இதனை "தானுமு முடன்மனத்தனமென்றுமிள்ளவை, யினமில குறியிலனாடியார்க்கிந்து தானே, யானெனதென்குதலினக்கிவைதமோன், மேனிகழ் சிவமொடு வேறலனவரோ" என்றும் "பழிப்பது சங்கமபத்திசெய்பவ, ரொழிப்பது பிறவியென் றுலகமோதுமே" என்றும் "உலகிலொருவன் சிவயோகி யுண்டத்தம் சராசரமா மலகிலுயிர்க ளெலாமுண்டதாகுமென்ன மறைகூறும்" என்றும் பெரியோர்களினாலே கூறப்பட்டமையாலுணர்க. இன்னும் இவ் விருந்தோம்பல் சிறப்புடையதென்பதற்குக் காரணம் இத்தன்மைத்து என்பதை பெரியபுராணத்திற் கூறப்பட்ட அறுபத்துமூன்று நாயன்மாருள் ஒருவராகிய இளையான்குடி மாறநாயனார் சிவனடியவர்க்கு விருந்தளித்து உபசரித்துவந்தமையால் ஈசுவரன் அவருக்குப் பிரத்தியக்ஷமாகி சத்தி, பதியாய் இருவர்க்கும் ஏக்காலத்தில் மோக்ஷங்கொடுத்தார் என்று கூறுகின்ற சரித்திரத்தினால் நாட்டுகின்றாம

நீக்கிக் காட்டினிடத்தே சஞ்சரிக்கின்ற மகரிஷிகளுங்கூட தம்மிடம் வந்தோராகிய விருந்தினர்க் குபசரித்தற்பொருட்டு விரும்பிய உணவாதிய பொருள்களை விரும்புந்தோறும் அக்கணமே கொடுக்கத்தக்க தெய்வத்தன்மை வாய்ந்துள்ள காமதேனு என்னுந் தெய்வப்பசுவைத் தமக்கு ஏவல்கேட்கும்வண்ணம அமைத்து வைத்திருந்தனராமையினானும் பதினான்குவருடம் வனத்திற்சஞ்சரித்துப் பின் இராவணசம்மாரமுடித்துத் தன் வானரசேனாசமூகத்தோடும் வந்த ஸ்ரீ இராமபிரானுக்குப் பரத்துவாசமுனிவர் காமதேனுவினால் விருந்தளித்து உபசரித்தமையினானும், வேட்டைமார்க்கத்திற் சென்ற கார்த்தவீரியார்ச்சுனன் என்கின்ற அரசனுக்கு சமதக்கினி முனிவர் காமதேனுவினால் விருந்துசெய்து, உபசரித்தமையினானும் மிக்க தபசிரேஷ்டராய்விளங்குகின்ற விசுவாமித்திரமுனிவர் முன் அரசனாயிருந்து வேட்டைக்குச் சென்றபொழுது வசிட்டமுனிவர் காமதேனுவினால் விருந்தளித்து உபசரித்தமையினானும், துரியோதனனொடு சூதாடித் தம் நாட்டைத்தையும் இழந்து பன்னிரண்டு வருடம் வனசஞ்சாரஞ் செய்தற்குச்சென்ற பஞ்சபாண்டவர்களை வரும் சூரியனை வணங்கி அக்ஷயபாத்திரம் ஒன்றைப் பெற்றுச் சென்று தம்முடன் வந்த பன்னீராயிரம் பிராமணோத்தமர்கட்கும் மற்றும் விருந்தாய் வந்தவர்கட்கும் தினமும் விருந்தளித்து உபசரித்து வந்தமையினானும் கண்டுகொள்க.

இனி இவ்வுலகத்தின்கண் நிலைபெற்று வாழ்வோர்களும் அதற்குரிய இவ்விருந்தோம்பலாகிய சற்கருமங்களை மறவாது செய்து அதனால் இம்மைப்பயனும் பெரும் புகழினையும் மறுமைப்பயனும் மோக்ஷத்தினையும் அடைந்துய்யுமாறு இறைவன் திருவருளைச் சிந்தித்து இதனைப் பூர்த்திசெய்கின்றேன். சுபம்.

சி. மு. இலக்குமணச்செட்டி.
உலகன்பட்டி.

உ

மாலினிமாதவம்

அல்லது

தர்மவிஜயம்

(22-ம் பக்கத்தொடர்ச்சி.)

மாலினி:—"ஆ! மாதவா! நீ சொல்லுகிறபடி இவ்வளவு நேசமாய் நாம் வாழ்ந்து வருநாளில் திடீரென்று உன்மனம் பேதிக்கும்படி என்னகாரணம் நேரிட்டது?. யாராவது உன் மனம் புண்பட ஏதாவது செய்ததுண்டா?"

மாதவன்:—"மாலினி! அப்படி யொன்றுமில்லை. ஆயினும் புருஷனாய்ப் பிறந்தவன் எவ்வளவு காலந்தான் பிறரைகை யெதிர்பார்த்துப் பிழைப்பது?. எனக்கும் இப்பொழுது 22-வயதாகின்றது. இக்கத்தியும் இக்கையில் பலமும் உள்ளவரை நான் எப்படியாவது காலங்கழித்துக் கொள்ளுவேன். இப்பொழுது நமது ராஜாங்கத்தார் சேனை சேகரிக்கின்றார்களாம். நானும் அதில் சேர்ந்து என் வயிற்றுப்பாட்டைக் கழிக்கலாமென்று எண்ணுகிறேன்"..

மாலினி:—(கண்ணீர்ததும்ப) "மாதவ! மாதவ!! ஐயோ! எவ்வளவோ அன்புடன் இதுவரை இணைபிரியாது வளர்ந்துவந்த என்னை—எங்களைப்—பிரிய உன்மனம் எவவாறு துணிந்தது! என்மனம் துணியவில்லையே.! ஆண் நெஞ்சம கல்லோ?" என்று முகத்தில் கை வைத்து விம்மி விம்மி யழுதாள்.

மாதவன்:—(மனம சகியாதவனாய் அவளைச் சமாதானஞ்செய்யச் சற்றுக் கிட்ட நெருங்கி மறு ஆலோசனையின்பேரில் மறுபடி பின்னடைந்து நின்றுகொண்டு) "ஏன் வருத்தப்படுகிறாய்? உனக்கென்னகுறைவு? என்பேரில் உங்களுக்குள்ள அன்புக்கு இதுவரை யாதொரு குறைவுமில்லை. ஆயினும்—"

மாலினி:—"பின்னை, என்ன காரணம்?"

மாதவன்:—"அம்மணி!——"

மாலினி:—"ஐயோ! ஏன் அவ்வாறு அழைத்து என்மனதைப் புண்ணாக்குகின்றாய்.? ஏதோ, உன்மனதில் வேதனை செய்துகொண்டிருக்கின்றது. அதைச் சொல்லமாட்டாமல் தியங்குகின்றாய். உன் விசுவாசத்துக்கு நான் அவ்வளவு பாத்திரமில்லையா? சொல்லேன்! சொல்லேன்! ஐயோ! உன் முகம் வாடுகின்றதே. மாதவ! உன் துக்கதுக்குக காரணமென்ன—" என்று அன்புடன் இனிமையாய் மாதவனை நோக்கி வினவினாள்.

மாதவன்:—தன் இருகர தலிங்களாலும் முகத்தை மூடிக்கொண்டு, விம்மி விம்மி யழுதுகொண்டே "மாலினி! நீயோ ஓர் பெரிய ஜமீன்தார் புதல்வி. நானோ தாய் தந்தை பேர்கூடத் தெரியாத ஓர் அனாதை. உங்கள் தயவால் இவ்வளவு காலம் உங்களுடன் வளர்ந்து விட்டேன். என் உதரநிமித்தம் எங்கேயாவது சென்று காலங் கழிக்க வேண்டாமா?"

மாலினி:—"மாதவ! ஐயோ! இன்னும் மறைக்கிறாயே. உன் மனதிலுள்ளதை முழுதும் நீ சொல்லவில்லையே! மாதவ! என்னிடம் சொல்லலாகாதா?"

மாதவன்:—"மாலினி! சுரி. எனக்கு இவ்விடத்தில் என்ன இருக்கின்றது?"

மாலினி:—"மாதவ! ஏன் அப்படிக் கூறுகின்றாய்? இதுவரை நீ இவ்விடமிருப்பதற்கு எது காரணமோ அதற்கு இப்பொழுது ஏதாவது குறைவு நேர்ந்ததோ?"

மாதவன்;—இல்லை!. ஆனாலும்—மாலினி—ஆ!——அம்மணி!"

மாலினி:—"மாதவ! என்ன! ஏன் "அம்மணி!" "அம்மணி!" என்றழைக்கின்றாய்!"

மாதவன்:—"மாலினி! தாங்களோ ஓர்பெரியஜமீன்தார் மனைவியாகப் போகின்றவர்கள்—ஜமீன்தாரிணியாகி!. நானோ?—கேவலம்"

மாலினி:—"ஹா! மாதவ! என்னசொன்னாய்?"

மாதவன்:—"ஆமாம். இம்மணிபுரம் ஜமீன்தாருக்கு உன்னை மணம் புரிவிப்பதாய் ஊரெல்லாம் வதந்தியாயிருக்கின்றதல்லவா?"

மாலினி:—"மாதவ! மாதவ!! மறுபடி இத்தகைய கடூரமான வார்த்தைகளை என்னிடம் சொல்லாதே. வேண்டேன்! வேண்டேன்! எனக்கு ஒருகாலும் விவாஹம் வேண்டாம்! மாதவ! மாதவ!! என் மாதவனையும் என்னையும் பிரிக்கக்கூடிய எவ்வித முயற்சிக்கும் நான் இடங்கொடேன்" என்று சொல்லி, மான்போல் துள்ளி மாதவன்மேற் பாய்ந்து அவனைக் கட்டிக்கொண்டு விம்மிவிம்மி யழ ஆரம்பித்தாள்.

மாதவனும் தன்னடங்காத் துயரத்தை யடக்கிக்கொண்டு மாலினியை மார்போடணைத்து அவள் கண்களைத் துடைத்து அவள் முகத்தை யன்புடன் நிமிர்த்தி நோக்கி "என் கண்மணி! என் அன்பே! மாலினி!" என்று இன்பமொழிகள் கூறி யவள் கன்னங்களைத் தன் கரதலங்களால் தடவி முத்தமிட்டான்.

மாலினியும் தேகபரவசையாய், மாதவன்மார்பில் அப்படியே சாய்ந்தாள்.

"வானாக நின்றின்ப மழையாய்ப் பொழிவதுபோல்
தானாகவே பொழியும் தையலரின் மெய்க்காதல்"

இரண்டாம் அத்தியாயம்.

அன்பெனும் இன்பக்கடலில் ஆழ்ந்து தன் நினைவற்றுத் தேகபரவசர்களாய், பூங்கொடியும் பாரிஜாத விருக்ஷமும்போல் ஒருவரையொருவர் தழுவி நமது கதாநாயகர்களிருக்கும் இந்நிலைமையில், ஏகதாள க்ரமமாய் 'கல், கல்' என்ற இரும்பு வளையச் சத்தமும், அதை யனுசரித்து, 'தர்மமே நிச்சயம்', 'தர்மமே நிச்சயம்' என்ற வாக்யமும் சற்றுதூரத்தில் கேட்டன. திடுக்கிட்டு மாலினியும், மாதவனும், சற்றுப் பிரிந்து நின்றார்கள். இதற்குள் தலை நிரம்ப நரைத்த கேசபாரமும், முகத்தில் வளர்ந்து நரைத்து மார்பின்மேல் துவளும் தாடியும், தலையில்கட்டிய காவித்தலைப்பாகையும், கழுத்துமுதல்கால்வரை தரித்த ஓர் காவிச்சட்டையும், இரும்பு வளையங்கள் கோர்க்கப்பட்ட கைத்தடியால் தன் நடைக் கிணங்கத் தரையில் தட்டி. 'கல்,' 'கல்' என்று சத்தம் செய்துகொண்டும் அதற்கிணங்க 'தர்ம

மே நிச்சயம்', 'தர்மமே நிசசயம்' என்று தாள கரமக தப்பாது உச்சரித்துகொண்டும் சுமார் 65 வயதுள்ள ஓர் பரதேசி ப்ரத்யக்ஷமாய் நமது கதா நாயகர்கள் முன்நின்றார். 'நாரியர்க்கழகு நாணமும் அன்பும்' என்ற பழமொழிப்படி நமது மாலினி மாதவனிடமிருந்து சற்று விலகித் தலை குனிந்து கடைக் கண்களால், நமது பரதேசியை உற்றுப்பார்த்துக்கொண்டு நின்றாள். மாதவனும், கம்பீரமாய்ப பரதேசியின் முகத்தையுற்று நோக்கி "இவர் யாரோ ஓர் மகான் போல காணப்படுகிறார். அன்று தினகரனும் நானும் வேட்டையாடின பிறகு களைப்பாறிக்கொண்டு, சிற்றுநீருக் கரையோரமாயுள்ள ஆல மரத்து நிழலில் இருக்கும்பொழுது இவர் இவ்விதமாகவே ப்ரத்யக்ஷமானார். இவா கருத்தென்னவென்று தோன்றவில்லையே." என்று பலவாறு தன்மனதுக்குள் ஆலோசித்துக்கொண்டிருக்கையில்,

பரதேசி:—(குறிப்பாய் மாதவனைக் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டு) "குழந்தைகளே! சந்தோஷம்! நிரம்ப சந்தோஷம்!! உங்கள் இஷ்டப்படி மணம்புரிந்து நீடூழிகாலம் வாழ்வீர்கள். "தர்மமே நிச்சயம்!" தெய்வ ஸங்கல்பமும் இதுதான். "தர்மமே நிசசயம்" என்று வாகளித்து ஓர் சிவப்புப் பட்டுப்பையினின்றும் கொஞ்சம் விபூதி யெடுத்து மாதவன் நெற்றியிலும் மாலினி நெற்றியிலும் இட்டு மறுபடி "குழந்தைகாள்! உங்களுக்கு ஒரு குறைவும் வராது. தெய்வ ஸம்மதமும் இதுவே" என்றார்.

மாதவன்:—"ஸ்வாமி! நாங்கள்பாவியர்கள். தங்களைப்போலொத்த மகான்களை யுபசரிக்கும் விதமறியாதவர்கள். நாங்கள் அபசாரத்துக்கு ஆளாய் விடாமல் எங்களைத் தாங்கள் மன்னித்தருள வேண்டும்" என்று பயபக்தியுடன் கேட்டான.

பரதேசி:—"குழந்தாய்! நீ நல்ல பிள்ளை! உன் முகத்தில் ராஜ லக்ஷணங்கள் அமைந்திருக்கின்றன. "தர்மமே நிச்சயம்." நீ நல்ல பிள்ளை. மூத்தோர் சொல்வார்த்தையமுதம். நீ சொன்னபடி கேட்பாய். எங்கே உன் கைத்தலத்தைக்காட்டு" எனவே மாதவன் உள்ளங்கையைக் காட்டினான். அதைப்பரதேசி சற்று நுட்பமாய்க் கவனிப்பதுபோல் பார்த்துவிட்டு, "குழந்தாய்! உன் சட்டையைக

கழற்று. நீ நல்ல பிள்ளை. புத்திசாலி. பெரியோர் சொல்லைத் தட்ட மாட்டாய். எங்கே சட்டையை அவிழ்'' என்று மறுபடி கேட்டார்.

மாதவன் மந்திரத்தால் கட்டுண்ட நாகம்போலத் தன் நினைவற்று, பரதேசியின் இனிய சொற்களால் மதிமயங்கி யந்திரப் பாவைபோலத் தன் சட்டையைக் கழற்றியெறிந்தான். உடனே பரதேசி மாதவனுடைய இடது விலாப்புறம் பார்த்து அதிலுள்ள 3 அங்குல நீளமுள்ள ஓர் வ்ரணத்தழும்பையே சற்று நேரம் கவனித்துவிட்டு, 'குழந்தாய்! உன் சட்டையை யணிந்துகொள். நீ நல்ல பிள்ளை. புத்திசாலி. 'தர்மமே நிச்சயம்' எனவே மாதவன் மறுபடி சட்டையை மாட்டிக்கொண்டான்.

பரதேசி:—''குழந்தாய்! உன்னிடம் ராஜ லக்ஷணங்களமைந்துள்ளன. நீ ஓர் ஸம்ஸ்தானத்து—''.

• மாதவன்:—''ஸ்வாமி தாங்கள் வாக்களிப்பது இன்னதென்று எனக்குத் தோன்றவில்லை நானோ தாய் தந்தையர் பெயர்கூடத்தெரியாத ஓர் அநாதை இதோ நிற்கின்ற இம்மங்கையின் பிதா, பாலூர் ஜமீந்தாரவர்கள் கிருபையால் நான் இதுவரை வளர்க்கப்பட்டு—''. .

பரதேசி:—முகமலர்ச்சியுடன் ''அப்பனே! நீ கவலைப்படவேண்டாம். பாலூர் மகராஜாவின யோக க்ஷேமங்கள் எவ்வாறு இருக்கின்றன?''

மாதவன்:—''ஸ்வாமி! நல்லோர்க்கு இது காலமல்ல பரமதயாளுவான அம்மகாராஜன் நாடு துறந்து இம்மணிபுர மகாராஜாவின கைபார்த்துப் பிழைக்கும்படி நேரிட்டிருக்கிறது''. (மாலினியை நோக்கி) ''மாலினி! நான் ஏதாவது மனம் வருந்தக் கூறிவிட்டேனோ?'' (மறுபடி பரதேசியை நோக்கி) ஆயினும் இம்மணிபுர ராஜனும் பரம தயாளுதான்—''.

பரதேசி:—''சிவ! சிவ! (காதுகளில் அடித்துக்கொண்டு) நாராயணா! நாராயணா! போதும், போதும்!—''

மாதவன்:—(திடுக்கிட்டு) ''ஸ்வாமி! என்ன! அப்படி உத்திரவாகிறது? இம்மாலினியை அம்மகாராஜனுக்கு பணிப்புரிவிப்பதாக—''.

பரதேசி:—(காதுகளில் அடித்துக்கொண்டு) "சிவசிவா! சிவசிவா! "கெடுவான் கேடு நினைப்பான்!" "கெடுவான் கேடு நினைப்பான்!!" "தர்மமே நிச்சயம்!" "தர்மமே நிச்சயம்!!" என்று உரக்க உபசரித்துக்கொண்டு மின்னல் பாய்வதுபோல ஓடி மறைந்தார்.

நமது கதா நாயகர்கள் அப்படியே ஸ்தம்பம்போல் ப்ரமித்து நின்றார்கள். சற்றுநேரங்கழிந்துத் தங்கள் ப்ரக்ஞை தெளியவே இதுவரை நடந்தனவெல்லாம் ஓர் கனவுபோல் தோன்றின. எதிரில் நின்ற பரதேசியைக்காணோம். "மணிபுரம் ஜமீந்தாரோ தங்கள் மேல் எவ்வளவோ அன்பும் ஆதரவுமாய் இருந்துவருகிறார். "அவர் மேல் குற்றம் கற்பிக்க இதுவரை யாதொரு காரணமும் தென்படவில்லை. அப்படியிருக்க இப்பரதேசி ஏன் இவ்வாறு அபவாதம் கூறவேண்டும்? ஒரு வேளை இப்பரதேசி சித்தப்பிரமை கொண்டவரோ? அல்லது ஜமீந்தாருக்கும் தனக்கும் உள்ள ஏதாவது இபற்கை விரோதத்தால் இவ்வாறு அவரைப்பற்றி அவதூறு கூறிச்செல் "லுகின்றாரோ?", என்று ஒன்றும் தோன்றாமல் மாலினியும் மாதவனும் பரஸ்பரம் பார்த்துக்கொண்டு அப்பளிங்காஸனத்தின்மீது மறுபடி நெருங்கி உட்கார்ந்து ஆலோசித்துக்கொண்டிருந்தார்கள்.

'இப்பிரபஞ்சத்தின அமைப்பையும் அதன் மாயா விலாஸங்களையும் ஆராய்ச்சி செய்வோமாகில், அவைகள் பெரும்பாலும இரு வகுப்பாக அமைந்திருக்கின்றன. இவ்வைம்புலங்களாலறியக்கூடியதும் பஞ்சபூதங்களாலமைக்கப்பட்டதுமான ஸகல சராசரங்களுடன் கூடிய உலகமும், இவ்வைம்புலன்களாலறியக்கூடாததும், ஆனால் அனுமான ப்ரமாணங்களால் ஊகிக்கத்தக்கதும் தன்னறிவால் மாத்திரம் அறியக்கூடியதுமான மனமும் ஆகிய இவ்விரண்டுமே பெரிய தத்துவங்களாய் விளங்குகின்றன.

பஞ்ச பூதங்களாலமைந்த உலகமானது பிரகிருதி விதிகளுக்குட்பட்டு நடக்க இம்மனமெனும் அதிசயதத்துவமானது, யாதொரு விதிக்குமகப்படாது பற்பல விதமாய் பிரபலித்துக்கொண்டிருக்கின்றது. ஒருவன் மனதிலுள்ளது அவனால் மாத்திரமறியக்கூடியதேயொழிய பிறரால் அறியக்கூடியதன்று.

"அகத்தினழகு முகத்தில் தெரியும்" என்றபடி ஒருவன் மனோபாவங்களை யவன் நடத்தையால் மாத்திரம் பிறர் அனுமானிக்கக்கூடுமேயல்லாது ப்ரத்யக்ஷமாய் அறியமாட்டார்கள். அவ்வனுமானங்கள் பெரும்பான்மை பிசகாகவே ஏற்படுகின்றன. சிரித்துச் சிரித்துக் குடியைக்கெடுக்கும் வஞ்சகரின் நெஞ்சத்தை யார்தான் நன்கு அறியக்கூடியவர்?

பரதேசியின் ஸம்பாஷணையைக் கவனித்துக்கொண்டிருந்த நமது கதா நாயகர்கள் மதிமயங்கி ஒன்றும் தீர்மானிக்கத்தோன்றாதவர்களாய் வீற்றிருக்கும் இந்நிலைமையில் சுமார் 21 வயதுள்ள ஓர் யௌவன புருஷன் வேட்டை யுடைதரித்து இடுப்பில் உடைவாள் தொங்கக் கையில் துப்பாக்கி யேந்திக்கொண்டு சிம்மக்குட்டிபோல் கம்பீரமாய்ச் சோலையில் பிரவேசித்து "மாதவா! மாதவா!! வேட்டையாட வரவில்லையா!" என்று அழைத்துக்கொண்டே அப்பளிங்காஸனத்தருகே வந்து நின்றான். நமது கதா நாயகர்கள் திடுக்கிட்டெழுந்து பிரிந்து நின்றார்கள். மாலினியின் நெஞ்சும் மார்பும் படபடவென்று துடித்தன. பயத்தாலும் நாணத்தாலும் தலை குனிந்தவளாய் அப்பன்னீர் மரத்தண்டை விலகினாள். மாதவனும் சித்தப்பிரமைகொண்டவனைப்போல் ஒன்றும் சொல்ல வாயெழாமல், வந்தவன் முகத்தை நோக்கமாட்டாமல் வெட்கித் தலைகுனிந்து நின்றான்.

இவ்விஷயங்களெல்லாம் கவனித்த அந்த யௌவன புருஷனது தேகமெல்லாம் நடுங்க ஆரம்பித்தது. கண்கள் சிவந்தன. அவன் இளமீசை படபடவென்று துடித்தது. வீராவேசமும் கோபாவேசமும் கொண்ட அவ்வாலிபன் தனது உடைவாளின் பிடியில் கையைச்செலுத்தி அதை உறையினின்றும் சற்று உயர்த்திக்கொண்டு கோபாவேசத்துடன் மாதவனை நோக்கி "அடே பாவி! அடே துரோகி! அடே சண்டாளா! அடே துஷ்டா! அடே உண்ட வீட்டுக்கு இரண்டு நினைத்த பாதகா!—".

மாதவன்:—(தலை நிமிர்ந்து) "தினகரா!—".

தினகரன்:—"அடே சண்டாளா! இனியென்னை யிவ்வாறு அழைக்க வேண்டாம்! அடே குலகோத்ர மறியாத அநாதையான உன்மேல் இரக்கங்கொண்டு பரமதயாளுவான என் பிதா உன்னை இது,

வரை வளர்த்து வந்ததற்கு—நன்றிகெட்ட பாதகா!—ராஜவம்சத்தில் உதித்த என் சகோதரி—குழந்தை—ஒன்றுமறியாப் பேதையாகிய—என் மாலினியை உன் மோகவலைக்குட்படுத்தி என் வம்சத்துக்கு அபவாதம் உண்டுபண்ணவா எண்ணங்கொண்டாய்?"

மாதவன்:—"தினகரா!"

தினகரன்:—"சீ! துஷ்டா! இனி அவ்விதம் என்னை அழைக்காதே! அடே உன் பதவிக்குக்காரணம் யாரடா? அவர் அன்னத்தையுண்டு உதியமரம்போல் நீ வளர்ந்ததுமல்லாது, அவர் அருமைப்புதல்வியின் கற்பையழிக்கவும் கருதினையோ? துஷ்டா! உன்னை இப்பொழுதே இவ்வுடைவாளால் இரண்டு துண்டாக்கிவிடுகின்றேன்" என்று கோபாவேசத்துடன் கத்தியை உருவி கிறு கிறு வென்று சுழற்றிக்கொண்டு மாதவன்மேல் சீறிப்பாய்ந்தான.

மாதவன் சற்று பின்னடைந்து, தன்னைக்காத்தற் பொருட்டு, தன் உடைவாளையும் உருவிக் கையிலேந்தி தினகரனைத் தகைந்து நின்று. "தினகரா! சற்று பொறு. உன் பலத்துக்கு நான் இளைத்தவனல்லன். நீ இதுவரை பேசிய நிந்தனைக்காக உன்னை இவ்வாளுக்கிரையாக்கியிருப்பேன். ஆயினும் என் தாய் தந்தையரினும் அதிகமாய் அன்பு ஆதரவுடன் என்னை வளர்த்துவந்த உன் பிதாவின் புதல்வன நீ ஆதலாலும, நாமிருவரும இதுவரை சகோதரர்போல வேற்றுமையின்றி வளர்ந்து வந்ததாலும், நீ என்னினும் சிறுவனான தாலும், கோபத்தால் நீ உச்சரித்த அவமரியாதைகளை மன்னித்தேன்—".

தினகரன்:—"என்ன!—நீ—என்னை—மன்னிப்பது!—".

மாதவன்:—(மனோ தைரியத்தோடு பொறுமையாய்) "தினகரா! நீ என்னகாரணம்பற்றி இவ்வாறு கோபங்கொண்டாய்? உன் கோபத்துக்கு நான் எம்மாத்திரம் காரணமென்றுவது நீ அறிந்தாயா? அதையறிந்த பிறகல்லவோ உன் பலத்தைககாட்டவேண்டும்." என்று கம்பீரமாய்க் கூறினன்.

[இன்னும வரும.]

R. S. நாராயணசாமி ஐயர், B. A., B. L.

சமாசாரக் கொத்து.

ஒரு கோரக்கொலை:—17—6—11-ல் மணியாச்சி ஜங்ஷனில் முதல் வகுப்பு வண்டியில் தம் அருமைமனைவியாருடன் பிரயாணஞ் செய்துகொண்டிருந்த திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டர் மிஸ்டர் ஆஷ் துரையவர்களை ஒரு மஹா பாவி ஓர் பெல்ஜியம் ரிவால்வரால் சுட்டுக்கொன்றுவிட்டான். பயங்கரமான இத்தீச்செயல் செய்த அப்பாவியானவன் செங்கோட்டைக்காரன் என்றும், வாஞ்சியையன் அல்லது சங்கரய்யன் என்று பெயருள்ளவனென்றும்சொல்லப்படுகிறது. இக்கொலைகாரனுக்கு மறுமையில் நரக தண்டனையுண்டென்று பலருமறிவர். அது மட்டுமோ? இம்மையிலும் இம்மஹாபாவிக்கு நரக தண்டனை கிடைத்தாற்போலவே இவன் கொலை செய்தவுடன் கக்கூஸ் கட்டிடத்தில் ஓடிப்போய்த் தன்னையும் சுட்டுக்கொண் டுயிர்விட்டான் இதனால் அதிக்கிரமித்த பாவத்துக்கு இம்மையிலேயே தண்டனை யுண்டென்பது பிரசித்தமாயிற்று. இவன் சமாசாரமொருபுறமிருக்க மிஸ்டர் ஆஷ் துரையவர்கள் மிகவும் தயாள குணமுள்ளவர். திருநெல்வேலி ஜில்லா மட்டுமல்ல மற்றும் பல ஜில்லாக்களில் ஜனங்களுக்கு வேண்டிய அனுகூலங்கள் பலவும் செய்து வந்தவர் ஏழை ஜனங்களிடம் இரக்கமிக்கவர். சமீபத்தில் யாம சென்னைக்குப் போகும்போது யாம் ஏறியிருந்த இரண்டாவது வகுப்பு ரயில் வண்டியில் பிரயாணஞ்செய்த திருநெல்வேலி ஜில்லா வாசியான ஒரு மிராசுதார் மிஸ்டர் ஆஷ் துரையவர்கள் பிரிவாற்றாமல் நினைத்து நினைத்துக் கண்ணீர் பெருக்கினார். அந்தோ பரிதாபம்! இந்தக் கொலையால் நம் தேசத்துக்கே அபக்கியாதியும் சங்கடங்களும் பலவுண்டு. இக்கொலை செய்த கொடும்பாவியை ராஜத்துரோகியென்று மட்டுமல்ல; தேசத்துரோகியென்றும் சொல்லலாம். இத்தகைய அதிக்கிரமித்த தீச்செயல்கள் சம்பவிப்பது தேசத்துக்கே அகௌரவம். அதிலும் கொல்லா விரதியாகிய பிராமணன் இப்படிச் செய்ததை நினைக்க நினைக்க மனம் துடிக்கிறது. ஐயோ! மிஸ்டர் ஆஷ் துரையவர்களின் மனம் எவ்வாறு துடித்ததோ? அவரது அருமை மனைவியார் மனம் எவ்வாறு துடித்ததோ?

பரோடா மகாராஜாவின் ஏகபுத்திரியாகிய "இந்திரா"வுக்கு இப்பொழுது வயது 18. இவள் தந்தையோடு ஐரோப்பா அமெரிகா முதலிய இடங்களுக்கு யாத்திரை செய்து திரும்பியவள். நிரம்ப புத்திசாலி. கல்விக்களஞ்சியம். இவளைக் குவாலியர் தேசாதிபதியாகிய விந்தியா மகாராஜாவுக்குக் கல்யாணம் செய்து தரத் தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது விந்தியா மகாராஜாவுக்கு ஏற்கனவே ஓர் மனைவி உயிரோடிருக்கவும் மகப்பேறில்லாக் குறையை நிவிர்த்திக்கவே அவர்க்கிப்பொழுது மறு மணம் நடக்கப் போகிறதாம். பரோடா மகாராஜா ஆசார சீர்திருத்தக்காரரென்பது உலகப் பிரசித்தியன்றோ? அப்பேர்ப்பட்டவர் தம் மகளை விந்தியா ராஜாவுக்கு மனைவியிருக்கவும் இளையாளாகக் கொடுக்க உடன்பட்டிருப்பது அனைவர்க்கும் வியப்பையும் விசனத்தையும் தருகிறது. இவரது செய்கை தகாத செய்கையாகுமென்றும், அது ஆசாரத் திருத்த உணர்ச்சி, முன்னேற்றத்தையடைந்துகொண்டு போகாமல் அதனைப் பின்னடையும்படியாய்ச் செய்ததாகவே முடியுமென்றும், லக்னோ அட்வோகேட் பத்திரிகை கூறுகிறது. பம்பாய் ஸோஷல் ரிபார்மர் பத்திரிகையோ அதனிலும் கடுமையாகவே எழுதுகிறது. பரோடா மகாராஜா வாயால் பேசும் பேச்சைக் காரியத்தில் காட்டக்கூடியவரல்லரென்று அறியாதார் சொல்லிக்கொள்ள நாம் கேட்டுள்ளோம் அது சரியாகவே போய்விட்டதென்று நாம் அஞ்சுகிறோம். ஆனால் இன்னமும் மகாராஜா அவர்கள் தமது தீர்மானத்தை மாற்றலாமே.

பஞ்சாப் மகாணத்தைச் சேர்ந்த லாயல்பூர் பப்ளிக் பிராஸிகியூடராகிய பாரிஸ்டர் ஹாக்கிம் அமினுடீனை லாயல்பூர் டிப்டி கமிஷனர் பிறப்பித்த வாரண்டின்மேல் லாகூரில் பிடித்து போலீஸ் பந்தோபஸ்தோடு லயால்பூருக்கு அனுப்பினார்கள். அவர் அங்கே ரூபா 5000 க்கு ஜாமீன் வாங்கிக்கொண்டு விடப்பட்டார். அவர் தமக்குக் கிடைக்கவேண்டிய பீஸுக்காக (Fees) கள்ளக் கையெழுத்துப்போட்ட பட்டி (Bill) தயாரிசெய்ததாய்க் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறாராம். அவர் லாகூரில் பிராஸிகியூட் செய்யப்படுவார்.

ADVERTISEMENT.

பட்டு பீதாம்பர கம்பெனி.

திருப்தியில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். } **ஸ்ரீ காசி.** { பட்டு பீதாம்பர காட்லாக் இனாமாக அனுப்பப்படும்

உருத்திராக்ஷங்கள்! ஜபமாலைகள்!!

பரிசுத்தமானது.

108 உள்ள மாலை 1-க்கு 6அணா முதல் ரூபா 12 வரை. விலை அதிகப்படுவதுபோல் மணிகள் சிறிதாக இருக்கும். 6முகக்கண்டிகள் 38 உள்ளது; கண்டி 1க்கு ரூபா 1முதல் 10வரை. 5 முகக்கண்டி 32 உள்ளது; கண்டி 1க்கு அணா 10முதல் ரூபா 10வரை விலை அதிகப்படுவதுபோல் மணிகள் பெரிதாகஇருக்கும். சம்மதமில்லாததை திரும்பப் பெற்றுக்கொள்ளப்படும்.

மடிதாவளிகள் வைதீகர்களுக்கு.

5 முழம் 1க்கு ரூபா	0	14	0		9 முழம் 1க்கு ரூபா		2	0	0
6	டை	1	4	0	10	டை	2	8	0
7	டை	1	8	0	12	டை	3	8	0
8	டை	1	12	0	15	டை	4	8	0

தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

பனி! பனி!! பனி!!!

பனிக்கு அடக்கமான சுத்தமான கம்பளி ரோமத்தால் செய்த உறுதியும், கனமும், நேர்த்தியுமான கம்பளிப்போர்வைகள், 6முழம் நீளம் 3 முழ அகலம். செகப்புமுதலிய சகல நிறத்திலும் தயாராக இருக்கின்றன. ஒரு படி 1-க்கு ரூபா 5—0—0. தபால்செலவு பிரத்தியேகம்.

காசி வயிரவர் கயிறு.

முதல் நெம்பர் 100-க்கு	..	...	3	0	0
2-வது நெம்பர் 100-க்கு	...	...	2	8	0
3-வது நெம்பர் 100-க்கு	...	...	0	6	0

குழந்தைகள்!

குழந்தைகள் விளையாடக்கூடிய பித்தளை வெண்கலத்தால் செய்த செம்பு, குடம், கரண்டிமுதல் 32 சாமான்கள் அடங்கிய அழகும் நேர்த்தியும் நகசும் பளபளப்புமுள்ள அழகிய பாத்திரங்கள் 32 உள்ள சிறு செட்டு 1-க்கு ரூபா 2. பெரிய செட்டு 1-க்கு ரூபா 4.

உடனே எழுதுங்கள்.

விலாசம்: மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி,

காசி Benares City.